**தலைப்பு 221 – தொழில் திணைக்களம்**

---

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

தொழில் திணைக்களத்தின் 2019 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றுகைக் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்று ஆகியவற்றை உள்ளடக்கிய 2019 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கிணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டது. 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 11(1) உப பிரிவின் ஏற்பாடுகளுக்கமைய தொழில் திணைக்களத்தின் நிதிக்கூற்றுக்கள் மீதான எனது கருத்துரைகள் மற்றும் அவதானிப்புரைகள் உள்ளடக்கப்பட்ட பொழிப்பு அறிக்கை 2020 யூன் 30 ஆந் திகதி பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு வெளியிடப்பட்டது. தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 11(2) உப பிரிவின் பிரகாரம் விரிவான முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கை 2020 ஆகஸ்ட் 28 ஆந் திகதி கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு வெளியிடப்பட்டது. இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(6) ஆம் உறுப்புரையுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 10 உப பிரிவின் பிரகாரம் அந்த அறிக்கை பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்படும்.

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியினால் ஏற்படும் தாக்கங்களை தவிர்த்து, 2019 திசெம்பர் 03 ஆந் திகதிய 271/2019 ஆம் இலக்க அரச கணக்குகள் சுற்றறிக்கையின் ஏற்பாடுகளின் பிரகாரம் தயாரிக்கப்பட்ட அந்த நிதிக்கூற்றுக்களில் 2019 திசெம்பர் 31 இல் உள்ளவாறான அரசாங்க அச்சகத் திணைக்களத்தின் நிதி நிலைமை மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் மற்றும் காசுப்பாய்ச்சல் என்பவற்றை பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு கோட்பாடுகளுக்கு இணங்க உண்மையான மற்றும் நியாயமான நிலைமையை பிரதிபலிக்கின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக எனது பொறுப்பு, கணக்காய்வாளரின் பொறுப்பு என்ற பிரிவில் மேலும் விபரிக்கப்பட்டுள்ளது. எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

### 1.3 நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் மற்றும் கணக்கீட்டு உத்தியேகத்தரின் பொறுப்பு

இந்த நிதிக்கூற்றுக்களை பொதுவான ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு தத்துவங்களுக்கு இணங்க மற்றும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 38 ஆம் பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள ஏற்பாடுகளுக்கமைய தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றினை தீர்மானித்தல் பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் பொறுப்பாக உள்ளது.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் உப பிரிவின் பிரகாரம் அமைச்சினால் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடியவாறு அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பான புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாக பேணுதல் வேண்டும்.

தேசிய கணக்காய்வு அதிகரச்சட்டத்தின் 38(1)(இ) உப பிரிவின் பிரகாரம் அமைச்சின் நிதிக் கட்டுப்பாட்டிற்காக ஆக்கபூர்வமான உள்ளக கட்டுப்பாட்டு முறைமையினை தயாரித்து பேணிச் செல்லப்படுவதாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தர் சான்றுபடுத்த வேண்டியதுடன், அந்த கட்டமைப்பின் ஆக்கபூர்வமான தன்மை தொடர்பில் முன்னர் மேற்கொள்ளப்பட்ட மீளாய்வொன்றினை மேற்கொண்டு, அதற்கமைய கட்டமைப்பினை ஆக்கபூர்வமானதாக நடாத்திச் செல்வதற்கு தேவையான மாற்றங்கள் மேற்கொள்ளப்பட வேண்டும்.

## 1.4 நிதிக்கூற்றுக்கள் கணக்காய்வு தொடர்பாக கணக்காய்வாளரின் பொறுப்பு

ஒட்டு மொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றைப் பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்களின் இல்லாமை என்பதன் உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடிகள் அல்லது தவறுகள் தனியாகவோ கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்க கூடியதாக இருப்பதுடன் இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் பொருளாதார தீர்மானங்கள் எடுக்கும் போது அது தொடர்பாக கருத்திற் கொள்ளப்படல் வேண்டும்.

என்னால் துறைசார் வெளிப்படை மற்றும் தொழில்துறை பின்னணியுடன் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வு செய்யப்பட்டன. மேலும்,

- மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களில் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் இனங்காணும் போதும் மதிப்பீட்டின் போது சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடுவதன் மூலம் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய ஆபத்துகளை தவிர்த்துக் கொள்வதற்கும் போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்ளல் எனது அபிப்பிரயாத்திற்கு அடிப்படையாகும். பொருண்மையான பிறழ் கூற்றினால் எழும் தாக்கங்களினை விட மோசடிகளால் இடம்பெறும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன் தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடியொன்று ஏற்படுவதற்கு காரணமாகின்றது.

- சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடும் பொருட்டு திணைக்களத்தின் உள்ளக கட்டுப்பாட்டின் ஆக்கபூர்வமானதன்மை தொடர்பாக அபிப்பராயமொன்றை தெரிவிப்பதற்கு கருத்து தெரிவிக்கவில்லை.

- வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்காக அடிப்படையாக கொள்ளப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்களை பொருத்தமான மற்றும் நியாயமான முறையில் நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளமையை மதிப்பாய்வு செய்தல்.

- ஒட்டுமொத்தமாக நிதிக்கூற்றுக்களை சமர்ப்பிக்கும் போது நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்புகள் மற்றும் உள்ளடக்கத்திற்காக அடிப்படையாக கொள்ளப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்கள் பொருத்தமானதாகவும் நியாயமாகவும் உள்ளடங்கியுள்ளதாக,

எனது கணக்காய்வில் இனங்காணப்பட்ட முக்கியமான கணக்காய்வு கண்டுபிடிப்புகள், உள்ளக கட்டுப்பாட்டிலான முக்கியமான குறைபாடுகள் மற்றும் ஏனைய விடயங்கள் தொடர்பில் பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு அறிவிக்கப்பட்டது.

## 1.5 ஏனைய சட்ட தேவைப்பாடுகள் தொடர்பான அறிக்கை

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 6(1)(ஈ) பிரிவு மற்றும் 38 ஆம் பிரிவின் பிரகாரம் பின்வரும் பின்வரும் விடயங்களை நான் வெளிப்படுத்துகின்றேன்.

(அ) நிதிக்கூற்றுக்கள் முன்னைய ஆண்டுடன் இணங்கியுள்ளதாக,

(ஆ) முன்னைய வருடத்தில் நிதிக்கூற்றுக்கள் தொடர்பில் என்னால் மேற்கொள்ளப்பட்ட பரிந்துரைகள் நடைமுறைப்படுத்தப்பட்டிருந்தன என்பது.

## 1.6 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

### 1.6.1 நிதிச் செயலாற்றல் கூற்று

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| நிதிச்செயலாற்றல் கூற்றில் வருமானமல்லாத பெறுவனவுகள் ரூபா 100,272 இனால் குறைத்துக் காண்பிக்கப்பட்டிருந்தது. | நிதிக்கூற்றுக்கள் முறையான கண்காணிப்பு மற்றும் வழிகாட்டல்களுடன் தயாரிக்கப்பட வேண்டியமை. | நிதிச்செயலாற்றல் கூற்றிற்கு ஏற்பட்ட தாமதத்தின் காரணமாக இந்த வழு இடம்பெற்றுள்ளது. |

### 1.6.2 காசுப்பாய்ச்சல் கூற்று

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| தேர்தல்கள் திணைக்களத்திலிருந்து மீளளிப்புச் செய்யப்பட வேண்டிய | அரச கணக்குகள் சுற்றறிக்கையின் பிரகாரம் | நிதிச்செயலாற்றல் கூற்றிற்கு தகவல்களை உள்ளடக்கும் போது |

| | | |
|---|---|---|
| ரூபா 8,810,550 தொகை ஏனைய செலவினத் தலைப்பொன்றிற்காக மேற்கொள்ளப்பட்ட செலவினம் அல்லாத போதிலும், அதனை காசுப்பாய்ச்சல் கூற்றின் செயற்பாட்டுப் பணிகளின் கீழான காசுப்பாய்ச்சலின் கீழ் உள்ளடக்கப்பட்டிருந்தது. | நிதிக்கூற்றுக்களை தயாரிப்பதற்கு நடவடிக்கை எடுக்கவேுண்டியமை. | ஏற்பட்ட தாமமத்தின் காரணமாக இந்த வழு இடம்பெற்றுள்ளதுடன், எதிர்வரும் வருடங்களில் இவ்வாறான தவறு இடம்பெறாது எனவும், அதற்கு உரிய நடவடிக்கைகள் எடுக்கப்படும் என்பதனையும் தெரிவிக்கின்றேன். |

### 1.6.3 முற்பணக் கணக்கு மீதிகள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | நிதிச் செயலாற்றல் கூற்றில் வருடமொன்றிற்கு உரிய முற்பணப் பெறுவனவுகள் (செலவு) மீதி ரூபா 1,404,931 தொகையும் முற்பண செலுத்தல்கள் ரூபா 1,398,181 தொகையும் குறைவாக காண்பிக்கப்பட்டிருந்தது. | சுற்றறிக்கை அறிவுரையின் பிரகாரம் சரியான மீதிகளை அடிப்படையாகக் கொண்டு நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கப்பட வேண்டியமை. | திறைசேரியின் நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் முற்பணக் கணக்குகளின் மீதியானது ரூபா 105,472,314 ஆன போதிலும், ஆண்டினுள் ஏனைய அமைச்சுக்கள் மற்றும் திணைக்களங்களால் மேற்கொள்ளப்பட்ட தவறான வரவு மற்றும் செலவு வைத்தல்கள் மூலம் திணைக்களத்தின் முற்பண ''பீ'' கணக்கின் பிரகாரம் சரியான செலவு மீதியை நிதிக்கூற்றுக்களில் காண்பிக்கப்பட்டுள்ளது. |
| (ஆ) | முற்பண ''பீ'' கணக்கிற்கு வரவு மற்றும் செலவின குறிப்புக்களின் கூட்டுத்தொகையின் வேறுபாடு மற்றும் திறைசேரியின் கூற்றுக்களின் பிரகாரம் அந்த வேறுபாடு கட்டுநிதி சீராக்கல் கணக்கில் ரூபா 116,021 இனால் கூடுதலாக காண்பிக்கப்பட்டிருந்தது. | அரச கணக்குகள் சுற்றறிக்கையின் பிரகாரம் நிதிக்கூற்றுக்களை தயாரிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டியமை. | இறுதி திறைசேரி அச்சீட்டு குறிப்புக்களின் பிரகாரம் ஏனைய திணைக்களமொன்றினால் மேற்கொள்ளப்பட்டுள்ள செலவு பதிவொன்றினை இனங்காண முடியாதுள்ளமையால் இந்த வேறுபாடு ஏற்பட்டிருந்ததுடன் அதன் பின்னர் அதனை திருத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. |

### 1.6.4 கட்டுநிதி மீதி

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| திறைசேரியின் அச்சீட்டு கூற்றுக்களின் பிரகாரம் ரூபா 8,810,550 தொகையான தீர்க்கப்படாத கட்டுநிதி மீதியொன்று நிலவிய போதிலும், நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் கட்டுநிதி மீதியொன்று காண்பிக்கப்படவில்லை. | அரச கணக்குகள் சுற்றறிக்கையின் பிரகாரம் பொதுவான ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு தத்துவங்களுக்கு இணங்க கூடியளவு செம்மையாக நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கப்பட வேண்டியமை. | பொழிப்பு அறிக்கையில் காண்பிக்கப்பட்டுள்ள உப கட்டுநிதி மீதியான ரூபா 8,810,500 தொகையானது தீர்க்கப்படாத கட்டுநிதியாக மாத்திரம் பதிவு செய்திருந்தமையை திருத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டதுடன் அந்த மீதியினை தேர்த்தல்கள் திணைக்களத்தினால் இதுவரையிலும் தீர்ப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படாமையினால் அது குறித்த கட்டுநிதிக் கணக்கில் சீராக்கம் செய்யப்பட்டுள்ளது. |

### 1.6.5 கணக்கீட்டு உத்தியோகத்தரினால் மேற்கொள்ளப்பட வேண்டிய சான்றுப்படுத்தல்

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 38 ஆம் பிரிவின் ஏற்பாடுகளின் பிரகாரம் தொழில் திணைக்களத்தின் நிதிக் கட்டுப்பாட்டிற்காக ஆக்கபூர்வமான உள்ளகக் கட்டுப்பாட்டு முறைமையொன்றினை உருவாக்கி பேணிச் செல்லப்படுவதாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தர் மற்றும் கணக்கீட்டு உத்தியோகத்தர் சான்றுப்படுத்த வேண்டியதுடன் அந்த கட்டமைப்பின் ஆக்கபூர்வதான தன்மை தொடர்பில் காலரீதியில் மீளாய்வு மேற்கொண்டு அதன் | 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 38 ஆம் பிரிவின் ஏற்பாடுகளின் பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டியமை. | எதிர்காலத்தில் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தில் குறிப்பிடப்பட்டுள்ள ஏற்பாடுகளின் பிரகாரம் சான்றுப்படுத்தல்களினை எடுப்பதற்கு நடவடிக்கை எடுப்பதாக தெரிவித்துக் கொள்கின்றேன். |

பின்னர் அந்த கட்டமைப்பினை செயற்திறனுள்ளதாக மாற்றிக் கொள்வதற்குஉரிய மாற்றங்களை மேற்கொள்வதாகவும் அந்த மீளாய்வுகள் எழுத்துமூலம் மேற்கொள்ளப்பட்டு அதன் பிரதியொன்று கணக்காய்வாளர் தலைமை அதிபதியொன்றுக்கு சமர்ப்பிக்கப்பட வேண்டுமென குறிப்பிடப்பட்டிருந்த போதிலும், அவ்வாறான மீளாய்வொன்று மேற்கொள்ளப்பட்டமைக்கான அறிக்கை கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

## 2. நிதி மீளாய்வு

### 2.1 செலவின முகாமைத்துவம்

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
| --- | --- | --- |
| மீளாய்வாண்டின் மீண்டெழும் செலவின விடயங்கள் 09 இற்கு உரிய ஒதுக்கப்பட்ட தொகையின் சேமிப்பானது ரூபா 366,510,771 ஆக இருந்ததுடன் அது நிதியேற்பாடுகளின் 31 சதவீதம் முதல் 95 சதவீதம் வரையிலான வீச்சில் காணப்பட்டது. மீளாய்வாண்டின் 06 மூலதன செலவின விடயங்களுக்குரிய உரியதாக ரூபா 208,629,686 ஆன சேமிப்புக்கள் காணப்பட்டதுடன் அது நிதியேட்டின் சதவீதமாக 29 சதவீதம் முதல் 80 சதவீதம் வரையான வீச்ச்ல் காணப்பட்டது. | நிதிப்பிரமாணம் 50 இன் பிரகாரம் செலவின மதிப்பீடுகளை கூடியளவு நடைமுறைக்கு பொருந்தும் வகையிலும் சரியானதாகவும் தயாரிப்பதற்கு திணைக்களம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டியமை. | 04/2019 ஆம் இலக்க பாதீட்டு சுற்றறிக்கையின் பிரகாரம் செலவினங்களை வரையறைத்தல், கட்டிடங்களை வாடகை அடிப்படையில் பெற்றுக்கொள்ளாமை, மெகவர பியச கட்டிடத்திற்கு செல்வதற்கு தாமதமடைந்தமையால் செலவினங்கள் எஞ்சியுள்ளன, 05/2019 ஆம் இலக்க பாதீட்டு சுற்றறிக்கையின் பிரகாரம் சேமிப்பு, பெறுகை பணிகள் மட்டுப்படுத்தப்பட்டமை போன்ற விடயங்கள் இவ்வாறாக சேமிப்புக்கு காரணமாக அமைந்திருந்தன. |

## 2.2 கடப்பாடுகள் மற்றும் பொறுப்புக்கள் ஏற்படுத்தப்படல்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| (அ) நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்படாத, பொறுப்புக்கள் பதிவேட்டில் காணப்பட்ட 03 செலவின விடயங்களுக்குரிய பொறுப்புக்களின் பெறுமதியானது ரூபா 2,181,270 ஆக காணப்பட்டது. | எமது திணைக்களத்தின் வலய அலுவலகங்கள், மாவட்ட அலுவலகங்கள், உப அலுவலகங்கள், மாவட்ட கைத்தொழில் சாலைகளின் பொறியியல் பரீட்சகர் அலுவலகள் மற்றும் ஏனைய பிரிவுகளிலிருந்து பொறுப்புக்களாக இனங்காணப்பட்டு எமக்கு அறிக்கையிடப்பட்ட சில பொறுப்புக்களை செலுத்துவதற்காக சமர்ப்பிக்காமை அந்த மாற்றத்திற்காக காரணமாக அமைந்திருந்தது. | திணைக்களத்தினால் அனைத்து நிதியாண்டின் இறுதியிலும் தீர்ப்பனவு செய்வதற்கு உள்ள பொறுப்புக்களினை சரியான பெறுமதிகளை நிதிக்கூற்றுக்களில் வெளிப்படுத்த வேண்டும் என்பது. |
| (ஆ) நிதிக்கூற்றில் கடப்பாடுகள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பான கூற்றினுள் உள்ளடக்கப்பட்டிருந்த போதிலும், பொறுப்புக்கள் பதிவேட்டில் உள்ளடக்கப்படாத 03 சந்தர்ப்பங்களுக்குரிய பொறுப்புக்களின் பெறுமதி ரூபா 2,461,387 ஆகும். | சரியான பதில் முன்வைக்கப்பட்டிருக்க வில்லை. | - மேற்படி - |
| (இ அரச கணக்குகள் சுற்றறிக்கை இலக்கம் 271/2019 இன் 3.4 ஆம் இலக்க பந்தியின் பிரகாரம் நிதிக்கூற்றுக்களின் குறிப்பு (iii) இல் கடப்பாடுகள் மற்றும் பொறுப்புக்கள் கூற்று, திறைசேரி பொறுப்புக்கள் கூற்றுடன் இணக்கம் செய்யப்பட வேண்டிய போதிலும், | அபிவிருத்தி மூலோபாய மற்றும் சர்வதேச வர்த்தக அமைச்சினால் ஊழியர் நலன்புரி பிரிவின் (E-ROC) செயற்திட்டத்திற்காக 195-02-03-13-2509 செலவின விடயத்தின் கீழ் 2019 ஆம் ஆண்டிற்காக ரூபா 2,100,000 நிதியேற்பாடாக எமது திணைக்களத்திற்கு ஒதுக்கப்பட்டுள்ளதுடன் | - மேற்படி - |

| | | | |
|---|---|---|---|
| | திறைசேரியின் பொறுப்புக்கள் கூற்றின் பிரகாரம் 221-2-4-1-2509 ஆம் இலக்க செலவின விடயத்தின் கீழான ரூபா 1,743,840 ஆன பொறுப்புக்கள் நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்படாததுடன் பொறுப்புக்கள் பதிவேட்டிலும் காண்பிக்கப் பட்டிருக்கவில்லை. | | ரூபா 356,160 ஆன செலவினங்களும் உள்ளடங்கலாக 2019 ஆம் ஆண்டின் போது ரூபா 1,980,077.32 தொகை செலவிடப்பட்டுள்ளது. |
| (ஈ) | நிதிப்பிரமாணம் 94 இன் பிரகாரம் வருடாந்த மதிப்பீடுகளில் போதியளவான காணப்படும் போது மாத்திரம் காணப்படாத விடத்து செலவினங்கள் அல்லது பொறுப்புக்கள் ஏற்படுத்தப்பட கூடாததுடன் அது தொடர்பில் ஒதுக்கீடு செய்யப்பட்ட செலவின ஏற்பாட்டினை விஞ்ச கூடாது. 221-2-4-1409 ஆம் செலவின விடயத்திற்காக ரூபா 1,011,620 ஆன பொறுப்புக்கள் ஏற்படுத்தப்பட்டிருந்ததுடன் ஆண்டின் இறுதியில் அந்த செலவின விடயத்தின் கீழான சேமிப்பானது ரூபா 33,685 மாத்திரமாக காணப்பட்டமையால் ஏற்பாடு செய்யப்பட்ட தொகையினை எஞ்சிய பொறுப்புக்களின் பெறுமதியானது ரூபா 944,185 ஆக இருந்தது. | திணைக்களத்தினால் பொறுப்புக்கள் ஏற்படுத்தும் போது நிலவும் நிதியேற்பாடுகள் மற்றும் நிதியேற்பாடுகளின் மீறல்கள் தொடர்பில் கவனத்துடன் செயற்பட வேண்டும். | எமது திணைக்களத்தின் 11 வலய அலுவலகங்களிலிருந்தும் 40 மாவட்ட அலுவலகங்களிலிருந்தும் 18 உப அலுவலகங்களிலிருந்தும் 12 மாவட்ட கைத்தொழில் சாலைகள் பொறியியல் அலுவலகங்களிலிருந்தும் ஏனைய 15 பிரிவுகளிலிருந்துமாக 96 பிரிவுகளை உள்ளடக்குகின்றது. இந்த 96 பிரிவுகளினுள் நிதியேற்பாடுகளை கட்டுப்படுத்துவதில் நடைமுறையில் பல சிரமங்கள் ஏற்படுகின்ற போதிலும், மேற்படி பிரிவுகளின் நாளாந்த பணிகளை தொடர்ச்சியாக நடாத்திச் செல்வதற்கு உரிய தேவைப்பாடு காணப்படுகின்றமையால் இவ்வாறு நிகழ்ந்துள்ளது என்பதனை தெரிவித்துக் கொள்கின்றேன். |

## 2.3 முற்பணங்களை வழங்குதல் மற்றும் தீர்த்தல்

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 2019 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளபடியான கட்டுநிதி பெறுமதிகளின் மீதி ரூபா 5,127,856 ஆக காணப்பட்டதுடன் 04 வருடங்களுக்கு மேற்பட்ட காலமாக அறவீடுகள் மேற்கொள்ளப்படாத கடன் மீதிகளின் பெறுமதியானது ரூபா 1,789,294 ஆகும். | தற்போதைய கடன் மீதிகளினை தாமதமின்றி அறவிடுவதற்கு நடவடிக்கை எடுத்தல் மற்றும் பழைய கடன் மீதிகளினை அறவிடுவதற்கு தேவையான அனைத்து நடவடிக்கைகளையும் முன்னெடுத்தல். | இந்த கடன் மீதிகளில் குறித்த உத்தியோகத்தர் களுக்கு அறிவிப்பதற்கும் அதற்குரிய பிரதேச செயலாளரின் மூலமும் அதேபோன்று கிராம உத்தியோகத்தர்களின் மூலமும் குறித்த உத்தியோகத்தர் களுக்கு அறிவித்து அறவிடுவதற்கு நடவடிக்கை முன்னெடுக்கப் படுவதுடன் அவ்வாறு அறவிட முடியாத கடன் மீதிகளை அறவிடுவதற்கு சட்டமா அதிபருக்கு அறிவிப்பதற்கும் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என்பதனை தெரிவித்துக் கொள்கின்றேன். |

## 2.4 வைப்பு மீதிகள்

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| பொது வைப்புக் கணக்கில் உள்ள தனிப்பட்ட பங்களிப்பு கணக்குகளில் பொறுப்பாக காண்பிக்கப்பட வேண்டிய ஊழியர் நலன்புரி நிதிய மீதிகளில் ரூபா 600 மில்லியனை தீர்ப்பனவு செய்வதற்கு திட்டமிடப்பட்டிருந்த போதிலும், அவற்றுள் 189 மில்லியன் மாத்திரம் தீர்ப்பனவு செய்யப்பட்டிருந்தது. இதன் காரணமாக பொது வைப்புக் கணக்கில் ஒரு வருடத்தினுள் தீர்ப்பனவு செய்யும் செயன் முன்னேற்றம் 31 சதவீதமாக | பொது வைப்புக் கணக்கில் உள்ள மீதிகளை இனங்கண்டு தனிப்பட்ட கணக்குகளுக்கு தாமதமின்றி செலவு வைப்பதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டியமை. | வழக்குகள் மூலம் தவணைகளாக சேகரிக்கப்படும் பணமும் உள்ளடக்கப் படுகின்றமை யினால் முழுமையான தொகை சேகரிக்கப்படும் வகையில் கொடுப்பனவுகளை மேற்கொள்ள முடியாமை, வைப்புத் தொகைக்கு உரியவர்கள் வெளிநாடுகளுக்கு சென்றுள்ளமை, பணத்திற்கு உரித்தாளர் மரணமடைந்தமை ஆகிய |

| | | |
|---|---|---|
| மாத்திரம் உள்ளதாக காண்பிக்கப்பட்டது. 2019 திசெம்பர் 31 ஆந் திகதியளவில் பொது வைப்புக் கணக்கின் மீதி ரூபா 793 மில்லியனாக காணப்பட்டதுடன் அவற்றுள் 05 வருடங்களுக்கு மேற்பட்ட மீதிகளின் கூட்டுப்பெறுமதி ரூபா 128 மில்லியன் ஆகும். | | காரணங்களினால் உரித்தாளர்கள் முன்வரும் வகையிலும் காத்திருத்தல் போன்ற விடயங்களினால் இந்த பணத்தினை செலுத்துதல் தாமதமடைந்ததனால் கடந்த வருடங்களில் கொடுப்பனவுகளை மேற்கொண்டமைக்காக போதியளவான கட்டுநிதி திறைசேரியிலிருந்து கிடைக்கவில்லை என்பதனை தெரிவித்துக் கொள்கின்றேன். |

**3. செயற்பாட்டு மீளாய்வு**

**3.1 சொத்துக்கள் முகாமைத்துவம்**

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| (அ) 2017 திசெம்பர் 31 ஆந் திகதிய 02/2017 ஆம் இலக்க நிதி அமைச்சினால் வெளியிடப்பட்டுள்ள அரச நிதியல்லாத சொத்துக்களின் முகாமைத்துவம் தொடர்பான சுற்றறிக்கையின் 02 ஆம் பிரிவிற்கு முரணாக திணைக்களத்தினால் பயன்படுத்தப்பட்ட 02 வாகனங்கள் தொடர்பில் பதிவு உரித்தினை திணைக்களத்திற்கு மாற்றியிருக்கவில்லை. | சுற்றறிக்கையின் பிரகாரம் நிறுவனத்தின் அனைத்து வாகனங்களையும் நிறுவனத்தின் பெயரில் பதிவு செய்வதற்கு நடவடிக்கை எடுத்தல். | 60-6848 ஆம் இலக்க வான் வண்டி ஐக்கிய நாடுகளின் அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் 53-8847 ஆம் இலக்க டபள் கப் ரக வாகனம் எமது அமைச்சினாலும் எமது திணைக்களத்திற்கு சுமார் 25 வருட காலத்திற்கு வழங்கப்பட்டுள்ளது. இரு வாகனங்களினதும் பதிவு சான்றுதழ்களின் மூலப் பிரதிகள் எம்மிடம் காணப்படுகின்ற போதிலும், திணைக்களத்திற்கு இணைப்பு செய்வதற்குரிய ஆவணங்களை தேடியறிய முடியாதுள்ளது. இந்த வாகனத்தை |

| | | | |
|---|---|---|---|
| | | | திணைக்களத்திற்கு சுவீகரிப்பதற்கு உள்ள இயலுமை தொடர்பில் நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டவாறு உள்ளன. |
| (ஆ) | 2015 யூலை 01 ஆந் திகதிய நிதி அமைச்சின் 02/2015 ஆம் இலக்க சுற்றறிக்கையில் காண்பிக்கப்பட்டுள்ளவாறு அரச நிறுவனங்களுக்கு சொந்தமான சிதைவடைந்த மற்றும் பயன்படுத்த முடியாத வாகனங்களை கைதவிர்ப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டிய போதிலும் 2019 செப்தெம்பர் 15 ஆந் திகதி வரையிலும் திணைக்களத்திற்கு சொந்தமான 05 வாகனங்கள் கைதவிர்க்கப்படவில்லை என்பது அவதானிக்கப்பட்டது. | பயன்படுத்தக் கூடிய வாகனங்களை பயன்படுத்த முடியாத வாகனங்களை சேதமடைந்ததாக இனங்காணல் மற்றும் அவற்றை அகற்றுதல் சுற்றறிக்கையின் ஏற்பாடுகளை பின்பற்ற மேற்கொள்ளப்பட வேண்டியமை. | சேதமடைந்த வாகனங்களினை கைதவிர்ப்பதற்காக மதிப்பீட்டுக் குழுவிற்கு அனுப்பப்பட்டுள்ளதுடன் அந்த குழுவின் அறிக்கை கிடைத்த பின்னர் மேற்படி நடவடிக்கைகள் எடுக்கப்படும் என்பதனை தெரிவித்துக் கொள்கின்றேன். |
| (இ) | 2019 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளபடியான மோட்டார் வாகன போக்குவரத்துத் திணைக்களத்திடமிருந்து கணக்காய்வினால் பெற்றுக் கொள்ளப்பட்ட தகவல்களின் பிரகாரம் தொழில் ஆணையாளர் நாயகத்தின் பெயரில் பதிவு செய்யப்பட்ட 22 வாகனங்கள் தற்போது திணைக்களத்தில் காணப்படவில்லை. அந்த வாகனங்களின் நிலவுகை மற்றும் பயன்பாடு தொடர்பிலான தகவல்கள் கணக்காய்விற்கு முன்வைக்கப்பட்டிருக்கவில்லை. | திணைக்களத்தின் பெயரில் பதிவு செய்யப்பட்டுள்ள வாகனங்கள் தொடர்பிலான பொறுப்பு திணைக்களத்திற்கு சாட்டப்பட்டுள்ளமை யினால் இது தொடர்பில் ஆராய்ந்து உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும். | இந்த வாகனம் தொடர்பில் எந்தவித ஆவணமும் எமது திணைக்களத்திடம் காணப்படவில்லை என்பதும் மோட்டார் வாகனத் திணைக்களம் மற்றும் மேல் வாகன மோட்டார் போக்குவரத்து திணைக்களத்தினால் தகவல்கள் கோரப்பட்டதுடன் இந்த வாகனங்கள் பயன்பாட்டில் இல்லாதிருந்தமையினால் கடந்த 15 வருடங்களாக வருமான அனுமதிப்பத்திரம் வழங்கப்பட்டிருக்கவில்லை என்பது உறுதிப்படுத்தப்பட்டது. அவ்வாறே இந்த அனைத்து வாகனங்களும் 1995 ஆம் ஆண்டிற்கு முன்னர் உற்பத்தி செய்யப்பட்டு பதிவு செய்யப்பட்டுள்ள |

| | | | |
|---|---|---|---|
| | | | வாகனங்களாக காணப்படுவதுடன் இந்த திணைக்களத்தின் ஆளணி பிரிவு 1995 ஆம் ஆண்டின் போது தொழில்சார் பயிற்சி அதிகாரசபையாக விலகி சென்றமையினால் இந்த வாகனங்களை எடுத்துச் சென்றுள்ளனரா என்பது தொடர்பில் தொழில்பயிற்சி அதிகார சபையிடம் தகவல் கோரப்பட்டுள்ளது என்பதனை தெரிவித்துக் கொள்கின்றேன். |
| (ஈ) | நகர அபிவிருத்தி அதிகார சபைக்குரிய காணியொன்றில் இரத்தினபுரி மாவட்ட தொழில் அலுவலகத்தினை நிர்மாணிப்பதற்காக 2017 ஏப்ரல் 07 ஆந் திகதி அடிக்கல் நாட்டப்பட்டிருந்தது. எனினும், இந்த இடத்தினை சுவீகரிப்பதில் நிலவிய சிக்கல்கள் காரணமாக கட்டிடத்தின் நிர்மாணப் பணிகள் தற்காலிகமாக இடைநிறுத்தப்பட்டிருந்ததுடன் 2020 யூன் 15 ஆந் திகதி வரையிலும் அதன் பணிகள் மீள ஆரம்பிக்கப்பட்டிருக்கவில்லை. | காணிகளின் உரித்தினை முறையாக கையேற்ற பின்னர் நிர்மாணங்கள் மேற்கொள்ள வேண்டும். | அமைச்சரவையின் அங்கீகாரம் கிடைத்திருந்த போதிலும், காணியினை சுவீகரிப்பதில் ஏற்பட்ட சிக்கல் நிலை காரணமாக கட்டிடத்தின் நிர்மாணப் பணிகள் தற்காலிகமாக நிறுத்தப்பட்டிருந்தன. |
| (உ) | மதிப்பிடப்பட்ட கிரயம் ரூபா 268,170,000 தொகையான பதுளை மாவட்ட புதிய தொழில் அலுவலகம் இலங்கை போக்குவரத்து சபைக்குரிய காணியொன்றில் நிர்மாணிக்கும் பணிகள் ஆரம்பிக்கப்பட்டிருக்கும் போதிலும், குறித்த காணியை உரிய முறையில் திணைக்களத்திற்கு சுவீகரிக்கப்பட்டிருக்கவில்லை. கட்டிடத்தில் நிர்மாணங்களுக்காக கட்டிடத் திணைக்களத்திற்கு ரூபா 54,791,204 ஆன தொகை 2018 | காணியின் உரித்து சரியான முறையில் சுவீகரிக்கும் வகையிலும் நிர்மாணப் பணிகளை மேற்கொள்வதில் பிரச்சினை ஏற்படும் என்பதனால் நிர்மாணங்களை ஆரம்பிப்பதற்கு முன்னர் காணியின் உரித்து தொடர்பில் உள்ள பிரச்சினைகள் | இலங்கை போக்குவரத்து சபையினால் எமது திணைக்களத்திற்கு காணியை கையளிப்பதற்கு இணக்கப்பாடு வெளியிடப்பட்டிருந்ததுடன் அதற்காக அமைச்சரவையின் அங்கீகாரமும் கிடைத்துள்ளது. இதன் காரணமாக நிர்மாணப் பணிகளை ஆரம்பிப்பதற்காக உரிய அடிப்படை நிதியாக ரூபா 54,791,203 ஆன தொகை |

| | | |
|---|---|---|
| திசெம்பர் 31 ஆந் திகதியளவில் வழங்கப்பட்டிருந்ததுடன் 2019 பெப்ரவரி 06 ஆந் திகதி கட்டிடங்கள் திணைக்களத்தினால் ஒப்பந்தக்காரருக்கு நிர்மாணப் பணிகள் கையளிக்கப்பட்டிருக்கவில்லை. | தீர்க்கப்பட வேண்டும். | கட்டிடங்கள் திணைக்களத்திற்கு விடுவிக்கப்பட்டிருந்தது. கட்டிடத்தின் நிர்மாணப் பணிகளும் இதுவரையிலும் மேற்கொள்ளப்படுவதுடன் குறித்த கட்டிடத்தினை சுவீகரிக்கும் பணிகளும் முன்னெடுக்கப்பட்டவாறு உள்ளது என தெரிவித்துக் கொள்கின்றேன். |

**3.2 முகாமைத்துவ நலிவுகள்**

-----------------------------------------

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
| --- | --- | --- |
| (அ) களுத்துறை மாவட்ட தொழில் அலுவலகம், பிரதி தொழில் ஆணையாளர் அலுவலகம் மற்றும் மாவட்ட கைத்தொழிற்சாலை பரீட்சிப்பு பொறியியல் அலுவலகம் ஆகிய அலுவலகங்கள் நடாத்திச் செல்லப்பட்டஇரு மாடிக் கட்டிடத்திற்கு அண்மையில் அமைந்துள்ள ‘‘குமரிமலை’’ மண்சரிவு காரணமாக 2018 சனவரி 15 ஆந் திகதி முதல் அந்த அலுவலகத்தின் ஒரு பகுதி தனியார் கட்டிடமொன்றிற்கு எடுத்துச் செல்ல நேர்ந்திருந்தது. ரூபா 27 மில்லியன் செலவிடப்பட்டு 09 வருடங்களுக்கு முன்னர் கட்டிடம் நிர்மாணிக்கப்பட்டிருந்த போதிலும், கட்டிடத் திட்டம் இதுவரையிலும் அங்கீகரிக்கப்பட்டிருக்கவில்லை. குறித்த மலை சரிவிற்கு உள்ளானமைக்கான காரணம் குறித்த கட்டிடத்தினை நிர்மாணிக்கும் போது 150 மீற்றர்கள் அளவில் முறையற்ற கிடையான வெட்டொன்று இடம்பெற்றிருந்தமை காரணமாக அமைந்துள்ளதாக கட்டிடங்கள் ஆராய்ச்சி | எதிர்பார்த்த பணிப்பொறுப்பினை செயற்திறனாகவும் ஆக்கபூர்வதாகவும் நிறைவேற்றுவதற்காக பொருத்தமான தீர்மானங்கள் எடுக்க வேண்டும். | கட்டிடங்கள் நிர்மாணத்திற்குரிய திட்டம் களுத்துறை நகர சபைக்கு சமர்ப்பிக்கப்பட்டுளது. கட்டிடத்தினை நிர்மாணிப்பதற்கு உரிய இடத்தினை பெற்றுக் கொள்வதற்காக மலையிலிருந்து 150 மீற்றர் அளவில் மண் வெட்டப்பட்டிருக்க வில்லை என்பது கட்டிடங்களுக்காக தயாரிக்கப்பட்ட அளவிடைப் பத்திரத்தின் மூலம் தெளிவாக்கப்படுகின்றது. இதன் பிரகாரம் குறித்த மலையானது எப்போது வெட்டப்பட்டது என்பதனை தெளிவாக இனங்காண முடியாதுள்ளது. |

| | | | | |
|---|---|---|---|---|
| | | நிறுவனத்தினால் வெளியிடப்பட்டிருந்த அறிக்கையின் மூலம் இனங்காணப்பட்டிருந்தது. | | |
| **4. நல்லாளுகை** ---------- ---------- **4.1 மக்களுக்கான சேவைகளை நிறைவேற்றுதல்** | | கட்டிடத்தின் திட்டத்தில் மற்றும் அதன் நிர்மாணத்தில் ஏற்பட்ட இந்த கவனயீனம் காரணமாக திணைக்களத்திற்கு உரிய சுமார் 4,622.7 சதுர அடிகள் கொண்ட அலுவலக பரப்பானது சுமார் 02 வருட காலமாக விளைவற்றுக் காணப்படுகின்றதுடன், 2018 சனவரி 15 ஆந் திகதி முதல் 2019 நவம்பர் 26 ஆந் திகதி வரையிலும் கட்டிடத்தினை வாடகையாக ரூபா 3.3 மில்லியன் செலவிடப்பட்டிருந்தமை அவதானிக்கப்பட்டது. | | |
| ---------- ---------- ---------- ---------- ---------- ---------- ---------- பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன. | (ஆ) | நீதிமன்றத்தின் மூலம் மற்றும் தொழில் அலுவலகத்தின் மூலம் அறவிடப்பட்ட 2019 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளபடியான ஊழியர்களுக்கு தீர்ப்பனவு செய்யப்படாது காணப்பட்ட ஊழியர் நலன்புரி நிதியத்தின் மீதி ரூபா 398,465,065 ஆகும். அவற்றுள் 2020 யூன்24 ஆந்திகதியிலும் தீர்க்கப்படாதுள்ள மீதி ரூபா 332,429,832.35 ஆகும். | ஊழியர்களுக்காக அறவிடப்பட்ட பணத்துக்கு அவர்களின் பணம் அவர்களின் கணக்கிற்கு தாமதமின்றி செலவு வைக்க வேண்டும். | திணைக்கள அறிக்கைகளின் பிரகாரம் பொதுவைப்புக் கணக்கில் 2019.12.31 ஆந் திகதியில் உள்ளபடியான ஊழியர் நலன்புரி நிதியத்தின் மீதி ரூபா 398,465,065.84 ஆகும். அவற்றுள் ரூபா 66,035,233.49 தீர்க்கப்பட்டுள்ளதுடன் 2020.06.24 ஆந் திகதியளவில் தொடர்ந்தும் ரூபா 332,429,832.35 ஆன மீதியொன்று நிலவுகின்றமையை குறிப்பிடுகின்றேன். |

| | **கணக்காய்வு அவதானிப்பு** | **கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை** | **பரிந்துரை** |
|---|---|---|---|
| | ---------------------------------- | ---------------------------------- | --------------- |
| (அ) | கொழும்பு மாவட்டத்திற்குரிய 02 தொழில் அலுவலகங்களின் 'சீ' அறிக்கைகள் ஊழியர் நலன்புரி நிதியத்திற்கு | தொழில் அலுவலகத்தின் மூலம் அல்லது நீதிமன்றத்தின் ஊடாக அறவிடப்பட்ட பணத்தை துரிதமாக அதன் | நீதிமன்றத்திற்கு செலுத்தப்படும் காசோலைகளை அனுப்புவதற்காக வைப்புச் செய்யப்பட்ட மாதத்திலிருந்து இரண்டு |

| | | | |
|---|---|---|---|
| | வழங்குவதற்கு அல்லது தொழில் அலுவலகத்தினால் அறவிடப்பட்ட ரூபா 2,088,427 தொகையினை இலங்கை மத்திய வங்கிக்கு அனுப்புவதற்கு தாமதமாகிய 07 சந்தர்ப்பங்கள் அவதானிக்கப்பட்டதுடன் அந்த தாமதக்காலம் 05 மாதங்களும் 03 வருடங்களுக்கும் இடைப்பட்ட வீச்சினைக் கொண்டிருந்தது. | நலனாளிகளுக்கு உரிய காலத்தில் கிடைக்கின்றமை உறுதிப்படுத்தும் உச்ச நடைமுறை யொன்றின் மூலம் செயற்படுவதற்கு திணைக்களம் நடவடிக்கை எடுக்க வேண்டும். | மாத காலம் எடுக்கும் சந்தர்ப்பங்கள் உள்ளன. அவ்வாறே கிடைத்த காசோலைகள் பொது வைப்புக் கணக்கில் வைப்புச் செய்யப்படுவதுடன் சீ அறிக்கையில் அல்லது றிக்குசிசன் பத்திரத்தினை பெற்றுக்கொள்ளும் நோக்கில் நீதிமன்றத்திலிருந்து பெற்றுக் கொள்ளப்படும் தகவல்கள் குறித்த மாவட்ட தொழில் அலுவலகங்களுக்கு அனுப்பப்படும்.<br><br>அந்த விபரங்கள் பல்வேறு காரணங்களின் அடிப்படையில் இந்த பிரிவிற்கு அனுப்புவது தாமதாகும் சந்தர்ப்பங்கள் காணப்படுகின்றமையால் தொழில் தருனரிடமிருந்து பெற்றுக் கொள்ளப்படும் சீ அறிக்கைகளில் காணப்படும் குறைபாடுகளை நிவர்த்தி செய்து அனுப்புவதற்கு சில காலம் எடுக்கின்றமை அதற்கு காரணமாக அமைந்துள்ளது. |
| (ஆ) | கிழக்கு கொழும்பு தொழில் அலுவலகத்திற்கு 2019 ஆம் ஆண்டினுள் 06 சந்தர்ப்பங்களில் நீதிமன்றத்திலிருந்து அனுப்பப்பட்டிருந்த ரூபா 630,520 தொகையை பங்களிப்புக் கணக்குகளில் வைப்புச் செய்வதற்கு இலங்கை மத்திய வங்கிக்கு அனுப்பும் உரிய செலவின அறிக்கைகள் மற்றும் ‘‘சீ’’ அறிக்கை 2019 திசெம்பர் 13 ஆந் திகதி வரையிலும் ஊ.ந.நி இற்கு | தொழில் அலுவலகத்தின் மூலம் அறவிடப்பட்ட பணத்தை துரிதமாக அதன் நலனாளிகளுக்கு உரிய காலத்தில் கிடைக்கும் வகையில் பொருத்தமான நடைமுறை யொன்றினை அறிமுகப்படுத்துவதற்கு திணைக்களம் நடவடிக்கை எடுக்க வேண்டும். | பணம் அனுப்பும் நீதிமன்றங்களுக்கு உரிய மாவட்ட தொழில் அலுவலகங்கள் மூலம் சீ அறிக்கைகள் மூலம் றிக்குசிசன் பத்திரங்களினை அனுப்பிய பின்னர் உரிய தரப்பினருக்கு காசோலைகள் அனுப்பப்படும். தாமதங்கள் ஏற்படுவது ஊ.ந.நி பங்களிப்பு பணங்களுக்கு உரிய சீ அறிக்கைகளை அனுப்புவதற்கு ஆகும்.<br><br>தற்போது பங்களிப்பு |

| | | | |
|---|---|---|---|
| | சமர்ப்பிக்கப்பட்டிருக்க வில்லை. | | பணம் அதற்குரிய சீ அறிக்கைகள் இலங்கை மத்திய வங்கிக்கு அனுப்புதல் இடம்பெறுகின்றது. அது 2015 ஆகஸ்ட் மாதம் முதல் நடைமுறைப்படுத்தப்படும் கணக்கு வைத்தல் நடைமுறையின் அடிப்படையிலேயே இடம்பெறுகின்றது. |
| (இ) | தொழில் பரீட்சிப்பு சந்தர்ப்பத்தில் சீ அறிக்கை, மாவட்டம் 66 அறிக்கை, சம்பளப் பதிவேடுகள் மற்றும் இலங்கை மத்திய வங்கியினால் பங்களிப்புப் பணம் கணக்கு வைக்கப்பட்டதாக நிறுவனத்திற்கு அறிவித்து அனுப்பப்படும் அறிக்கை ஆவணங்கள் தொழில் உத்தியோகத்தர்களால் பெற்றுக்கொள்ளப்பட வேண்டும். அந்த தகவல்கள் இலங்கை மத்திய வங்கியின் தரவுக் கட்டமைப்பில் தகவல்களுடன் இணங்காமை, கணிப்பிடப்பட்ட நிலுவைப் பணம் நிறுவனத்திலிருந்து பெற்றுக்கொள்ளப்பட்ட சீ அறிக்கைகள் மற்றும் சம்பளப் பதிவேடுகளுடன் இணங்காமை, நீதிமன்றத்தினால் அனுப்பப்பட்ட செலவினக் கூற்றுக்கள் நிலுவைக் கணிப்பீட்டுடன் இணங்காமை, தொழில் அலுவலகத்தினால் அனுப்பப்பட்ட நாணய நிலுவை மற்றும் நிலுவைப் பணம் ஆகியவற்றுக்கிடையே இடைவெளி நிலவுகின்ற போன்ற காரணங்களினால் | மத்திய வங்கியில் பேணப்படுகின்ற தகலல் கட்டமைப்பு மற்றும் அதனுடன் தொடர்புடைய தகவல் கட்டமைப்பொன்று இல்லாதிருந்த மையினால் இந்த தாமதங்கள் வேறுபாடுகள் ஏற்படுகின்றமை அவதானிக்கப்பட்டது. திணைக்களத்தினாலும் அவ்வாறான தகவல் கட்டமைப்பொன்றினை பேணும் தேவைப்பாடு தொடர்பில் முகாமைத்துவத்தின் கவனம் செலுத்தப்பட வேண்டியமை. | ஊழியர் கணக்குகளுக்கு நிலுவைப் பணத்தினை செலவு வைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் போது தகவல் இணங்காமை மற்றும் வேறுபாடுகள் தொடர்ச்சியாக ஏற்படுகின்றமை பொதுவான விடயடமாக காணப்படுகின்றது. கடந்த சில வருடங்களில் அவதானிக்கப்பட்ட இவ்வாறான குறைபாடுகள் தொடர்பில் கடந்த நடாத்தப்பட்ட பயிற்சி நிகழச்சித் திட்டங்களின் போது தேவைப்பாட்டினை அறிவிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு அவ்வாறான குறைபாடுகளை குறைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. இலங்கை மத்திய வங்கியில் உள்ள தொழில் தருனர்களினால் நேரடியாக இலங்கை வங்கிக்கு அனுப்பப்பட்ட தகவல்களாகும். தொழில் அலுவலகங்களின் மூலம் அனுப்பப்படுவது சீ அறிக்கைகளில் உள்ள தகவல்கள் ஆகும். அவை மத்திய வங்கியின் தகவல்களுடன் இணங்கவில்லை என குறிப்பிட்டு அனுப்பப்பட்டு |

| | | | |
|---|---|---|---|
| | இவ்வாறு அறவிடப்பட்ட பணம் ஊழியரின் பங்களிப்புக் கணக்கிற்கு செலவு வைப்பதற்கு முடியாத சந்தர்ப்பங்கள் 19 அவதானிக்கப்பட்டன. இந்த சந்தர்ப்பங்களில் நிலுவைப் பணம் கணக்குவைக்கப்படாது காணப்பட்ட காலப்பகுதி 1 முதல் 19 வருடங்களுக்கு இடைப்பட்டதாக காணப்பட்டது. | | சந்தர்ப்பங்களில் இலங்கை மத்திய வங்கி தகவல் கட்டமைப்பில் உள்ள பெயர்கள் தவறாகும் சந்தர்ப்பங்களும் காணப்படுகின்றன. இதன் காரணமாக இவ்வாறான குறைபாடுகளை நிவர்த்தி செய்யும் போது மிகவும் கவனத்துடன் மேற்கொள்ள வேண்டியமையால் சில திருத்தங்களை மேற்கொள்ளகூடிய காலம் எடுக்கும். |
| (ஈ) | திணைக்களத்தின் 06/2011 ஆம் இலக்க சுற்றறிக்கையின் 02 ஆம் பந்தியின் பிரகாரம் புகார்கள் / முறைப்பாடுகள் கிடைக்கப் பெற்று 14 நாட்களினுள் அது தொடர்பில் விசாரணை மேற்கொள்ளப்பட வேண்டிய போதிலும், ''மகாநாம டிறேட் சென்டர் - மொறட்டுவ' தொடர்பில் விசாரணை மேற்கொள்ளப்பட்டிருந்தது. முறைப்பாடு கிடைத்து 04 மாதங்களின் பின்னர் ஆகும். அந்த முறைப்பாட்டிற்காக மாவட்டம் 66 அறிக்கையின் பிரகாரம் ரூபா 824,600 தொகையினை செலுத்துமாறு சட்ட நடவடிக்கை 01/02 கட்டளை அனுப்பப்பட்டிருந்தது. 06 மாத தாமதத்தின் பின்னர் ஆகும். இந்த நிறுவனம் 2004 யூலை 25 ஆந் திகதி தனியார் முயற்சியொன்றாக பதிவு செய்திருந்த போதிலும், ஊழியர் நலன்புரி நிதியத்திற்காக பதிவு | மக்கள் முறைப்பாடுகள் மற்றும் புகார்கள் தொடர்பில் துரிதமான நடவடிக்கைகள் திணைக்களத்தின் மூலம் மக்களினால் எதிர்பார்க்கப்படும் சேவையினை செயற்திறனாகவும் உரிய காலத்திலும் வழங்குவதற்கு இயலுமான அனைத்து நடவடிக்கைகளையும் எடுப்பதற்கு திணைக்களத்தின் தலைவர் உள்ளடங்கலான பதவியணி நடவடிக்கை எடுக்க வேண்டும் என்பது. | சனாதிபதி செயலகம், தொழில் அமைச்சு உள்ளடங்கலான பல்வேறு அரச நிறுவனங்களிலிருந்து கிடைக்கும் முறைப்பாடுகளுக்கு முன்னுரிமை செயற்படுகின்றமையால் அந்த கோவைகளுக்கு முன்னுரிமை வழங்கப்பட்டிருந்தது. தெற்கு கொழும்பு மாவட்ட தொழில் அலுவலகத்தின் வெற்றிடங்கள் நிலவுகின்றமை, திணைக்களத்தினால் 30 சதவீத நலன்கள் விடுவிக்கப்படுகின்றமை ஆரம்பிக்கப்பட்டிருந்தமையினால் அங்கத்தவர்கள் நாளாந்தம் பெரும்பாலான B பத்திரங்களினை பதிவு செய்தல் ஆகியவற்றின் காரணமாக இந்த அலுவலகத்தின் மிகவும் வேலைப்பளுவிற்கு உட்படுகின்றமையினால் இதற்குரியதாக ஏதேனும் தாமதங்கள் ஏற்பட்டுள்ளதாக தெரிவிக்கின்றேன். தொழில் உத்தியோகத்தர்களால் நிறுவனங்களினை பரீட்சிப்புக்கு உள்ளாக்கும் |

| | | |
|---|---|---|
| | செய்திருந்தது இந்த முறைப்பாட்டினை விசாரணை செய்த காலப்பகுதியான 2018 ஆம் ஆண்டில் ஆகும். இந்த நிறுவனத்தை தொழில் உத்தியோகத்தர்கள் அவ்வவ்போது பரிசோதனைக்குட் படுத்தியிருந்த போதிலும், 14 ஆண்டுகள் கடந்த பின்னரே அந்த நிறுவனம் ஊழியர் நலன்புரி நிதியத்திற்கு பதிவு செய்திருக்கவில்லை என்பது அவதானிக்கப்பட்டது. 2016 ஆம் ஆண்டு முதல் இந்த நிறுவனத்தின் ஊழியர்கள் பல்வேறு சந்தர்ப்பங்களில் முறைப்பாடுகள் / புகார்கள் மூலம் ஊழியர் நலன்புரி நிதியம் / பணிக்கொடை மற்றும் நட்டஈடு கோரியிருந்த போதிலும், அந்த முறைப்பாடு செய்த தரப்பினருக்கு உரிய நலனை பெற்றுக்கொள்ளுமாறு கோரிக்கை விடுத்து 03 வருடங்களுக்கு மேற்பட்ட காலம் கடந்திருந்த போதிலும், அதற்கான உரிய நலநன வழங்குவதற்கு தொழில் திணைக்களம் தவறியிருந்தது. | போது தொழில் வழங்குனர்கள் தகவல்களை மறைக்கின்ற காரணத்தினால் ஊழியர் நலன்புரி நிதியத்திற்கு பதிவு செய்தல் மிகவும் கடினமாக பணியாக காணப்படுகின்றது. அவ்வாறே ஊழியர்கள் நீண்டகாலமாக தகவல்களை மறைக்கின்றமைக்கு ஒத்துழைப்பு வழங்கி சேவை முடிவடையும் சந்தர்ப்பத்தில் முறைப்பாடு செய்தல் போன்ற சம்பவங்களினால் விசாரணைக்கு எடுக்கும் காலம் நீடிக்கப்படுகின்றது. முன்னாள் தொழில் ஊழியர்களின் அரச முகாமைத்துவ உதவி உத்தியோகத்தர்களின் வெற்றிடங்களும் புலனாய்வு பணிகளை துரிதமாக நிறைவு செய்வதற்கு முட்டுக்கட்டையாக அமைந்த பிரதான காரணமாக உள்ளது என்பதனை தெரிவிக்கின்றேன். |

**5. மனிதவள முகாமைத்துவம்**

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| (அ) இலங்கையில் | திணைக்களத் | தொழில் உத்தியோகத்தர்கள் |

| | | | |
|---|---|---|---|
| | அமைந்துள்ள அனைத்து அரச சார்பற்ற நிறுவனங்கள் / தோட்ட பரிசோதனை ஆகியவற்றுக்காக தொழில் திணைக்களத்தின் கீழ் 11 வலய அலுவலகங்கள், 40 மாவட்ட தொழில் அலுவலகங்கள், 17 உப தொழில் அலுவலகங்கள் மற்றும் 10 மாவட்ட கைத்தொழில் பரீட்சிப்பு பொறியியல் அலுவலகங்கள் தாபிக்கப்பட்டிருந்தன. இந்த பணியினை நிறைவேற்றுவதற்காக தொழில் திணைக்களத்திற்கு அங்கீகரிக்கப்பட்ட தொழில் உத்தியோகத்தர்களின் எண்ணிக்கை 597 மற்றும் உயர்தர பதவிகள் 56 ஆகும். இவற்றுக்கிடையே உயர் தர பதவிகள் 56 அங்கீகரிக்கப்பட்டிருந்த போதிலும், மீள்கட்டமைக்கப்பட்ட காரணத்தினால் 2019 இறுதி வரையிலும் அந்த பதவிகள் வெற்றிடங்களாக காணப்பட்டதுடன் தொழில் உத்தியோகத்தர்கள் பதவிகள் 97 இலும் நீண்டகாலமாக வெற்றிடமாக காணப்பட்டது. | திடமிருந்து எதிர்பார்க்கப்பட்ட செயற்பணியினை மிகவும் செயற்திறனாகவும் வினைத்திறனாகவும் நிறைவேற்ற முடியுமான வகையில் மனிதவளத்தை உச்ச செயற்திறனுடன் பேணிச் செல்வதற்கு திணைக்களம் நடவடிக்கை எடுக்க வேண்டும். | விசேட தரம் / ஆட்சேர்ப்பு நடைமுறை தயாரிக்கப்பட்டு நிறுவனத்தின் பணிப்பாளர் நாயகத்தின் பரிந்துரையினை பெற்றுக் கொள்வதற்காக எனது DL/E/3/58 ஆம் இலக்க மற்றும் 2019 திசெம்பர் 26 ஆந் திகதிய கடிதம் அனுப்பப்பட்டுள்ளது. அந்த ஆட்சேர்ப்பு நடைமுறையினை பின்பற்றி பின்னர் தொழில் உத்தியோகத்தர்கள் (விசேட தரத்திற்கு) நியமிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் |
| (ஆ) | திணைக்களத்தின் தொழிற்சாலை பொறியியல் வல்லுனர் பதவிகள் 03 வெற்றிடமாக காணப்பட்டதுடன் 10 மாவட்ட கைத்தொழில்சாலை பரிசோதகர் பதவிகளில் 4, 14 கைத்தொழில்சாலை பரிசோதகர் பொறியியல் பதவிகளில் 2 வெற்றிடமாக இருந்த | திணைக்களத்திடமிருந்து எதிர்பார்க்கப்பட்ட செயற்பணியினை மிகவும் செயற்திறனாகவும் வினைத்திறனாகவும் நிறைவேற்ற முடியுமான வகையில் மனிதவளத்தை உச்ச செயற்திறனுடன் பேணிச் செல்வதற்கு | கைத்தொழில் சாலைகள் பாதுகாப்பான பிரிவொன்றாகும்.இந்த கணக்காய்வு ஐயவினாவில் குறிப்பிடப்பட்டுள்ள பதவிகளுக்கு மேலதிகமாக மேலதிக தொழில் ஆணையார் நாயகம் (பொறியியல்), தொழில் ஆணையார் இந்த பிரிவில் நிலவும் பொறியியல் வெற்றிடங்கள் தொடர்பில் |

| | | |
|---|---|---|
| போதிலும், 2019 திசெம்பர் 31 ஆந் திகதி வரையிலும் இந்த வெற்றிடங்களை நிரப்புவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | திணைக்களம் நடவடிக்கை எடுக்க வேண்டும். | அரச நிர்வாக, உள்நாட்டலுவல்கள், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சின் மூலம் அறிமுகப்படுத்தப்பட்டுள்ள PACIS மென்பொருள், அதில் குறிப்பிடப்பட்டுள்ளவாறு பதவியணி அந்த மென்பொருளுடாக நாளதுவரையாக்குவதற்கு நாடளாவிய ரீதியில் மற்றும் ஒருங்கிணைந்த பதவிகளின் வெற்றிடங்களை நிரப்புதல் கட்டாயமாக கருத்தில் கொள்ளப்படுதல் வேண்டும் என குறிப்பிடப்பட்டிருந்தது. அதன் பிரகாரம் 2016/05 ஆம் மாதம் முதல் இதுவரையிலும் ஒவ்வொரு மாதத்திலும் இந்த தரவுக்கட்டமைப்பு நாளது வரையாக்கப்பட்டுள்ளது. அதற்கு மேலதிகமாக, பொறியியல் சேவையில் நிலவும் வெற்றிடங்கள் தொடர்பில் 2018.03.08 மற்றும் 2019.02.07 ஆந் திகதிய கடிதங்கள் மூலம் அரச நிர்வாக அமைச்சிற்கு அனுப்பப்பட்டுள்ளது. |